2014 ஆகஸ்ட் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர் விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குடியாத்தம் பகுதியிலே ஏற்கெனவே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குப் பொதுமக்கள் நிலம் வழங்கியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். மகிழ்ச்சி. அவ்வாறு இருக்குமாயின், மூன்றாண்டுக் காலம் கால தாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. ஏன் மூன்றாண்டுக் காலம் கால தாமதம் ஆகிறது என்பது தெரியவில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினால், அதிலே என்ன பிரச்சினை இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, ஏதாவது பிரச்சினை இருந்தால், அதனை முடிவுக்குக் கொண்டு வந்து, அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 317, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**317—**

## அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***42419—திரு. சு. ரவி:**

*மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, தக்கோலம் பேரூராட்சியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.*

[2014 ஆகஸ்ட் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

**திரு. சு. ரவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமே எனது குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே என் நலன் என சூளுரை மேற்கொண்டு, அல்லும் பகலும் அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

*வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட தக்கோலம் பேரூராட்சி, சென்னைக்கு அருகிலுள்ள வளர்ந்துவரும் பேரூராட்சியாகும். அந்தப் பேரூராட்சியை சென்னையுடன் இணைக்கும் விதமாக, 200 கோடி ரூபாயில் நான்கு வழிச் சாலை அமைக்கும் திட்டமும் மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பேரூராட்சியில் 200-க்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்கள் வசித்து வருகிறார்கள். குறிப்பாக 80 ஆதி திராவிடர் குடும்பங்களும், 40 பழங்குடியினர் குடும்பங்களும் பல ஆண்டுகளாக குடிசைகளிலே வாழ்ந்து வருகிறார்கள். குடிசைகளே இல்லாத மாநிலமாக உருவாக்க அனுதினமும் பாடுபட்டுவரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், குடிசையிலே வாழ்கின்ற அந்த ஏழை எளிய மக்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குடிசைகளற்ற நகரங்களை உருவாக்க, தொலைநோக்குத் திட்டம், 2023-ல் கிட்டத்தட்ட 65,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுப்பதற்குத் திட்டங்கள் தீட்டியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்த தக்கோலம் பேரூராட்சி, அந்தத்*

2014 ஆகஸ்ட் 4]

*திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில், குடிசைகளற்றப் பேரூராட்சியாக உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

**திரு. சு. ரவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின்மூலம், அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டத்தில், ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அழகரசன் நகர், சத்தியா நகர், புதுமைக் காலனி, பெரியார் நகர் யூ பிளாக் 1 மற்றும் 2 போன்ற பகுதிகளில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் 30 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ளதால் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. எனவே, அந்தக் கட்டடங்களை இடித்துவிட்டு அதே இடத்தில் அப்பகுதி மக்களுக்குப் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தால், புதுப்பித்துக் கொடுக்கக்கூடிய நிலையில் இருந்தால் அதனை ஆய்வு செய்து, புதுப்பித்துக் கொடுக்கப்படும் அல்லது பழுது நீக்கப்படும். அந்தக் கட்டடங்களை இடித்துவிட்டுத்தான் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்தால், மாண்புமிகு*

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, அந்தக் கட்டடங்களை இடித்துவிட்டு, அந்த இடத்தில் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதியில் மூர்த்திங்கர் தெரு, ஏரிக் கரையில் தமிழக அரசின் குடிசைமாற்று வாரியத்தின் முன்னோடித் திட்டமாக லிப்ட் வசதி உட்பட, ஏழடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கான ஏற்பாடுகளோடு திட்டம் தயாரிக்கப்பட்டது. உண்மையிலேயே அது பாராட்டுதற்குரிய திட்டம். அந்தத் திட்டம் கடந்த பத்து ஆண்டுகளாக நிலுவையில் இருக்கின்றது. குடியிருப்பு கட்டப்படவில்லை என்று சென்ற முறை இதைப்பற்றி நான் அவையில் கேட்டபோதும் உடனடியாக ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், அதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிசைமாற்று வாரியத்தின் அந்த முன்னோடித் திட்டத்தினை விரைவுபடுத்தி, செயல்படுத்த ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, ஆக்கிரமிப்பாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று அதற்குத் தடையாணை பெற்றார்கள்.*

*தற்போது குடிசைமாற்று வாரியத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தில் அந்தத் தடை ஆணையை நீக்கியிருக்கிறோம். இப்போது குடிசைமாற்று வாரியத்தின் இடங்களை ஆக்கிரமிப்பு செய்தவர்களிடம் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. பேச்சுவார்த்தை முடிந்தபிறகு, அந்த இடத்தில் குடிசைமாற்று வாரியத்தின் சார்பாக அடுக்குமாடிக் குடியிருப்புகள்*

கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

**திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, திருத்துறைப்பூண்டி நகராட்சி, வளர்ந்து வரக்கூடிய ஒரு நகராட்சியாகும். அந்த நகராட்சியில் வட்டாட்சியர், பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, தொடக்கக் கல்வி அலுவலகம், வட்ட வழங்கல் அலுவலகம், தனி வட்டாட்சியர் அலுவலகம் போன்ற அலுவலகங்கள் எல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.*

*வெளி மாவட்டங்களிலிருந்து பணி மாறுதல்மூலம் வரக்கூடிய அரசு ஊழியர்கள், அங்கே வீடுகள் வேண்டுமென்று கேட்கின்றபோது, அவர்களுக்கு வீடுகள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில், அங்கே அரசு குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியத்தின்மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கப்படுமா என்பதுதான் வினா. ஆனால், வீட்டு வசதி வாரியத்தின்மூலம் திருத்துறைப்பூண்டியில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்.*

*சென்னை மாநகரத்தைத் தவிர, மற்ற நகரங்களில் கட்டப்பட்டிருக்கின்ற வீட்டு வசதி வாரிய வீடுகள் காலியாக இருக்கின்றன. ஏனென்றால், ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைபடி அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படியை அதிகமாகக் கொடுப்பதால், அரசு ஊழியர்கள் சொகுசாக தனியார் வீடுகளில் வாடகைக்குத் குடியிருக்கிறார்கள்.*

*அதனால், திருத்துறைப்பூண்டியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் இதர அலுவலங்களில் அரசு ஊழியர்கள் எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள் என்பதைப் பார்த்து, தேவைப்படின் அங்கு வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று பரிசீலனை செய்து நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 318, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**318—**

## உயர்மட்டப் பாலம்

*44397—**திரு. சு. குணசேகரன்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை வட்டம், மேலூர்-இளையான்குடி சாலையில் செம்மனூர் அருகில் உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை வட்டம், மேலூர்-இளையான்குடி சாலையில், செம்மனூர் அருகில் நட்டாற்றின் குறுக்கே சுமார் ரூ.385.00 இலட்சம் செலவில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*